Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
STC No. 304/2023

## Deposition of P.W.3

| | | |
|---|---|---|
| Name | : | சித்ரகலா |
| Husband’s Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | மேற்பனைக்காடு |
| Age | : | **42/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 10.12.2024**
(1, 2, 4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை. 3வது எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

<u>**முதல்விசாரணை**</u>

நான் மேற்பனைக்காடு கிராமத்தில் வசித்து சத்துணவு கூடத்தில் சமையல் வேலை செய்து வருகிறேன். அ.சா.**1** சீதை எனது அம்மா. அ.சா.**2** மகேஸ்வரி எனது அக்கா. ஆஜராகி உள்ள பாஸ்கரன், பிரியா, சூர்யா மற்றும் ஆஜராகாத சுதாகர் ஆகியோரை தெரியும். எனது அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் என் அம்மா சீதை மூத்த மனைவி. எனது அப்பாவின் **2**வது மனைவி ராஜகுமாரி என்பவரது மகள்தான் **2**வது எதிரி பிரியா ஆவார். **1**வது எதிரி பாஸ்கர் **2**வது எதிரி பிரியாவின் கணவர் ஆவார். **3**வது எதிரி சுதாகர் **1**வது எதிரி பாஸ்கரனின் தம்பி ஆவார். **4**வது எதிரி சூர்யா **3**வது எதிரியின் மனைவி ஆவார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே சொத்து பிரச்சனை இருந்து வந்தது. சுமார் **2 1/2** வருடங்களுக்கு முன்பு இருக்கும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒருநாள் காலை **9.00** மணியளவில் நான் பள்ளியில் உள்ள சத்துணவு கூடத்திற்கு சமைக்க சென்றுவிட்டேன். நான் சமையல்செய்யும் பள்ளிக்கு கொஞ்ச தூரத்தில் எனது அம்மா சீதை வீடு மற்றும் தோட்டம் உள்ளது. என் பள்ளி அருகே சென்றவர்கள் என்னிடம் எங்கள் தோட்டத்தில் ஒரே சத்தமாக உள்ளது என்றும், போய் பார்க்கும்படியும் சொன்னார்கள். நான் உடனே அங்கு சென்று பார்த்தபோது என் அம்மா சீதை மயங்கி கிடந்தார். என் அக்கா மகேஸ்வரியின் வலது காதில் இரத்தம் வந்தபடி இருந்தது. அவரும் மயங்கியப்படி இருந்தார். அவர்களிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது தேங்காய் வெட்ட சென்றபோது வெட்டுக்காரர்களையும், எதிரிகள் பிரியா, பாஸ்கர் இருவரும் வந்து தடுத்ததாகவும், அதன்பிறகு எதிரிகள் சுதாகர், சூர்யா இருவரும் அங்கு வந்தார்கள் என்றும், எதிரி பாஸ்கர் கம்பால் என் அம்மாவை அடித்ததாகவும், என் அக்கா மகேஸ்வரியை எதிரி சுதாகர் செருப்பால் அடித்ததாகவும், எதிரிகள் சூர்யா, பிரியா இருவரும் கையால் என் அம்மா சீதையும், அக்கா மகேஸ்வரியையும் அடித்ததாகவும் சொன்னார்கள். காயமடைந்த என் அம்மா

சீதை மற்றும் என் அக்கா மகேஸ்வரி இருவரையும் புதுக்கோட்டை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தேன். அங்கு சிகிச்சையில் இருந்தபோது கீரமங்கலம் போலிசார் வந்து எங்களை விசாரித்தார்கள். என் அம்மா புகார் வாக்குமூலம் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் சம்பவ இடத்திற்கு சென்றதிலிருந்து சுமார் 2 மணிநேரத்தில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் பள்ளிக்கூடத்தில் இருந்தபோது தகவல் கிடைத்து அங்கு சென்று மருத்துவமனைக்கு எனது அம்மாவையும், எனது அக்காவையும் அழைத்து சென்றேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையின்போது சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் மறுநாள் காலை புதுக்கோட்டை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. போலிசார் விசாரித்த என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நான் பக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியும். சம்பவம் தொடர்பாக எனது அம்மா காவல்நிலையத்தில் புகார் அளித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை எனது அக்கா கல்பனாவின் கொழுந்தனான வழக்கறிஞர் எழுதினார் என்றால் சரிதான்.

2. எனது அப்பா 2வது எதிரி பிரியாவிற்கு இடத்தினை எழுதிக்கொடுத்துவிட்டார் என்று விரோதம் கொண்டு சம்பவத்தின்போது நாங்கள்தான் எதிரிகள் தரப்பிரனரை தாக்கினோம் என்றால் சரியல்ல. கர்ப்பிணியாக இருந்த 2வது எதிரி பிரியா நாங்கள் தாக்கியதால் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றும், எங்கள் மீது 2வது எதிரி பிரியா புகார் அளிப்பதிலிருந்து தப்புவதற்காகவே நாங்கள் பொய்யாக மருத்துவமனை சென்று எதிரிகள் மீது புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனது தாயாரையும், அக்காவையும் அடிக்கவில்லை என்றாலும், வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>